# சத்திய வேத
# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

( செய்தித்தாளாகப் பதிவுபெற்றது )

**காவலன்**

**சந்தாதாரரின் கவனத்திற்கு**

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | ,, | 4-50 |
| 3 மாத | ,, | 2-25 |

( தபாற் செலவு உட்பட )

95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஆனி மாதம் 6-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 20-ம் இல.


# குருத்துவ தங்க யூபிலி விழாவில் பாப்பரசரின் உபதேசம்

வைகாசி மாதம் 17-ம் திகதி தமது குருத்துவத் தங்க யூபிலியின் ஞாபகார்த்தமாக 279 குருமாணவர்களுக்கு பரி. தந்தை 6-வது சின்னப்பபாப்பரசர் வர்த்திக்கான் சம்பேதுரு மாதேவாலயத்தில் குருப்பட்டமளித்து அவர்களுக்கு திருச்சன்மானங்கள் செய்து உபதேசித்தருளினர். அவர் செய்த உபதேசத்தில் புதிய குருமார் தாமாகவே விரும்பிச் செய்துகொண்டவிரதத்துவ வாக்குத்தத்தத்தின் பெருமையை எடுத்துக் கூறி, திருச்சபைக்கும், அவரவர் தத்தம்மேற்றிராணிமாருக்கும் பிரமாணிக்கமுள்ளவர்களாக இருக்குமாறு தூண்டியருளினர். பரி. தந்தையுடன் 10 கருதினல்மார் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். குருமாரின் கரங்களைச் சுத்திகரிப்பதில் கருதினலவர்கள் பாப்பரசருக்குத் துணைபுரிந்தனராயினும் தாமே ஒவ்வொருவர் மேலும் தம் கரங்களை வைத்து, தூயஆவியானவரை வேண்டிக்கொண்டார். அன்று பாப்பரசரின் திருக்கரங்களினல் குருப்பட்டாபிஷேகம் பெற்ற குருமாருள் வண. யோசெவ் செல்வராசா எனும் இலங்கை மகனும் ஒருவராவர்.

## தொழிற்சங்க ஸ்தாபகர் குரு அர்ச்சியசிஷ்டர் ஆக்கப்பட்டார்

எத்தொண்டு செய்யினும் அத்தொண்டின் மூலம் புனிதர் பதவியை அடையலாம் என்பதை ஓர் தொழிற்சங்கம் ஸ்தாபித்து அதன்மூலம் சிறந்தசமூகத் தொண்டு 19-ம் நூற்ருண்டிற் செய்து வந்த இத்தாலிய குருவாகிய லெயனுட் முறியால்டோ சுவாமியாருக்கு சென்றவாரம் பரிசுத்ததந்தை அர்ச்சியசிஷ்டபட்டம் அளித்ததிலிருந்து அறியக்கிடக்கின்றது. அர்ச். முறியல்டோ சுவாமியாரின் அனுக்கிரகத்தினல் புதுமையாகக்குணப்படுத்தப்பட்ட ஒரு சிறுமியும், ஒரு இளைஞனும் பட்டமளிப்பு வைபவத்தின் போது சமூகம் அளித்திருந்தனர். தேவாலயத்தில் அன்று வந்திருந்தவர்களுள் இத்தாலிய தேச பிரதமர் திரு. றூமோர் குறிப்புக்குரியவர். அர்ச் முறியல்டோ சுவாமியார் வேலையில்லாத் திண்டாட்டத்தினல்வாடிய இளைஞர்பலரை அடக்கிய ஒரு சங்கம் ஸ்தாபித்து புனித சூசையப்பர் பெயரை அச் சங்கத்துக்கிட்டு அதைச் சிறப்பாக நடத்தி மக்களைத் தேவனுக்கும் நாட்டுக்கும் உகந்தவர்களாக்கி வந்து அர்ச்சியசிஷ்டரானர்.

## ஆர்மீனிய கிறீஸ்தவசபைப் பிதாப்பிதா பரி. தந்தையைச் சந்தித்தார்

1374 ஆண்டுகளுக்கு முன் விசுவாச சத்திய கருமங்களிலேஏற்பட்ட அபிப்பிராய பேதங்களின் நிமித்தம் கத்தோலிகக திருச்சபையிலிருந்து பிரிந்து போன ஆர்மீனியன் கிறீஸ்தசபையினரின் தற்போதைய தலைவர் பிதாப்பிதா வஸ்கன் அடிகளார் சென்றவாரம் வத்திக்கான் சென்று பரி. தந்தையைச் சந்தித்து அளவளாவினர். அவர்கள் இருவரும் குதூகலமாகக் கதைத்துக்கொண்டபோது பரி. தந்தை பிதாப்பிதா வஸ்கன் அடிகளைப் பார்த்து, "எமது விளங்காத் தன்மைகளை அகற்றிவிட இன்னும் நாள்வரவில்லையா" என்று கேட்டு அன்பு வளர்த்தாராம். ஒற்றுமைக் காரியாலயத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் வஸ்கன் அடிகளார், "அதிகம்பிக்கையும் அதிதீவிரமான நடைமுறைகளும் ஒற்றுமைக் கருமத்துக்கு உதவி செய்யாது" என்றூர்.

## அர்ச். மரியா கொறெற்றியைக் கொன்றவர்

20-ம் நூற்ருண்டில் கற்பெனும்பரிசுத்ததனத்துக்கு இளைஞரிடையே ஓர் எடுத்துக்காட்டாக திருச்சபையில் விளங்குபவர் புனிதை மரியா கொறெற்றியே. அவரைக் கொன்ற அலெக்சான்ரோ செறனெலி தனது 88-ம்வயதில் சென்றவாரம் காலமானர் என்ற செய்தி கிடைத்திருக்கின்றது. மரியாகொறெற்றி 1902-ம் ஆண்டில் கொலை செய்யப்பட்டபோது அவர் வயது 12. அவரது உடம்பில் 14 கத்திக் காயங்கள் காணப்பட்டன. தான்செய்த படுபாதகசெயலின் தன்மையை உணர்ந்த செறுனெலி 30வருடகாலமாக மறியலில் இருந்த காலத்திலேயே மனம்வருந்தித்துக்கமேலீடு கொண்டவராய்த் தன் எஞ்சிய வாழ்நாளை ஒரு சந்நியாசமடத்திலே ஒரு தோட்டக்காரனுகச் செலவு செய்தார். என்றும் உண்மையான மனஸ்தாபம் நிறைந்தவராகவே இருந்தார். இறுதிநாட்களில் அவர் உதடுகளில் அடிக்கடி பின்வரும் வார்த்தைகள் உதித்தன. "நான் ஒரு புனிதையைகொன்ற படும்பாவி. விரைவில் நான் அவரை மோட்சத்தில் சந்தித்துக் கொள்வேன்." மரியாகொறெற்றியின் பிரேதம் அடக்கம்செய்யப்பட்ட இடமாகிய நெற்றுனே என்னும் கிராமத்துக்கு, சென்ற புரட்டாசிமாதம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் விஜயம்செய்து, அவ்வூரை மகிமைப்படுத்தினர்.

## 12000 செபமாலைகள்

இங்கிலாந்திலே சசெக்ஸ் மாவட்டத்திலுள்ள றேவாட்ஸ் எனுமிடத்திலுள்ள புனித சூசையப்பரின் வயோதிகர்சாலையில் "செபமாலை மனிதர்"என அறியப்படுகின்ற திரு. சாள்ஸ் கொன்னர் என்பவர் இருந்துவருகின்ருர். இதுவரை இவர் தனது கையாலே 12,000 செபாலைகளைக்கட்டி ஆபிரிக்காக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மிஷனரிமாருக்குப் பார்சல் பார்சல்களாக அனுப்பிவைத்திருக்கின்ருர். பலவிடங்களிலுமிருந்து அபிமானிகள் பலராலும் அனுப்பிவைக்கப்படுகின்ற பழையனவும் அறுந்துபோனவையுமான செபமாலைகள், செபமாலை மணிகள், பிளாஸ்ரிக் அல்லாத மணிவடங்கள், சிறிய சிலுவைகளை இனமாகப் பெற்றுப் புதிய செபமாலைகள் கட்டுவதில் அவர் தனது பொழுதைப் போக்கிவருகின்ருர்.

## 6-வது சின்னப்ப பாப்பரசர் குருமாருக்குச் செய்த பல உபதேசத் துணுக்குகள்

பரிசுத்த தந்தையின் குருத்துவ தங்க யூபிலி விழாவின் காலத்தில் அவர் பல தருணங்களில் குருமாருக்கு ஊட்டிய உபதேசங்களை ஞாபகப்படுத்துவது நன்று.

○ சுவிசேஷத்தைப் பரப்பும் உமது பொறுப்பான வேலையில் பிறரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

○ தேவன் உம்மில் வைத்திருக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாயிருங்கள்,

○ நீர் செய்திருக்கும் சுயபரித்தியாகம் தாராளமானதாக இருக்கட்டும்.

○ உமது குருத்துவ அபிஷேகம் என்றும் உமது ஞாபகத்தில் இருப்பதாக.

○ உலகில் தோன்றும் கிறீஸ்து நாதரின் சாயல்கள் நீங்களே!

○ செபமே குருத்துவ சீவியத்தின் மத்தி.

○ கிறீஸ்துநாதரின் தியாகத்தில் முழுமையாக பங்கு பெறுவீர்களாக.

## ஆருவது சின்னப்பர் பெரும் பாப்புகளில் ஒருவர்

6-வது சின்னப்ப பாப்பரசரின் குருத்துவ தங்க யூபிலி வைபவத்தை உலகின் எல்லாப் பாகங்களும் அன்புநிறைந்த முறையில், தந்தையும் பிள்ளைகளும் என்றபான்மையில் கொண்டாடுகின்றன. தந்தை சுமந்து வரும் குடும்பசுமையின் பாரத்தைப் பிள்ளைகள் நன்கு உணர்ந்திருக்கின்ருர்கள் என்பது வெளிப்படை. முன் ஒருபோதும் இல்லாத கஷ்டமான காலத்தில், மிகப் பாரதூரமான பிரச்சினைகள் திருச்சபையை எதிர்நோக்கி இருக்கும் காலத்தில் 6-வது சின்னப்பர் பாப்புவின் கடமைகளை ஏற்று அவைகளைத் துணிவாகவும், திடமாகவும், செய்து வருகின்ருர். பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்காது அவற்றிற்கு ஆகவேண்டியவற்றை அவர் செய்துவரும் முறையைக்கண்டு உலகம் பிரமித்து நிற்கின்றது. அமெரிகக் கருதினல் குஷிங் அடிகளார் 6-வது சின்னப்ப பாப்பரசரை உலகின் பெரும்பாப்புக்களுள் ஒருவராய் எடுத்துக் காட்டியிருக்கின்ருர். சென்ற 50 வருடகாலமாகத் திருச்சபையை ஆண்டுவந்த பாப்பரசர்மார் யாவருக்கும் உள்ள சிறந்த குணங்கள் யாவும் இவரில் காணப்படுவதை எடுத்துக் காட்டி இவரைப்போல் சகல குணங்களும் அடங்கிய பாப்பரசரைக் காண்பதரிது என அவர் கூறியிருக்கிருர்.

## பிரான்சு தேசத்தில் சில விசேஷ அனுமதிகள்

குருமாரில்லாத சில பாகங்களில் வேதவழிபாட்டுக் கருமங்களில் சாதாரணமாகக் குருமார் செய்துவரும் சில கடமைகளை இல்லறத்தோரில் தெரிந்தெடுக்கப்படுபவர் செய்வதற்கு பிரான்சு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசியாவின் புனித றீத்தம்மாள்

அசாத்தியமான காரியங்களின் விசேட சலுகைக்காரியென இருகரமெடுத்துப் பக்திசெய்யப் படுகின்ற அற்புத வரத்தியாகிய புனித றீத்தம்மாளின் திருநாள் நிகழும் வைகாசித்திங்கள் 22ம்-நாள் வந்துபோயிற்று. இந்தப் புனிதவதியின் உலக வாழ்க்கையில் நிகழ்ந்த சில அசாத்தியமான காரியங்களை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் என்க.

“எங்கள் தந்தையைக் கொலைசெய்த அந்தக் கொலைபாதகரை நாங்களும் கொலைசெய்யாது விடப்போவதில்லை” என்று இடிமுழக்கம்போல் திக்கெல்லாம் செவிடுபடக் கர்ச்சித்தான் இளைஞர்கள் இருவரிலும் முதியவனான ஜோண். “பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண், பழிக்குப் பழி, அவர்களைப் பழிவாங்காது நாங்களும் விடப்போவதில்லை” என்று முழுவீடும் அதிரத் தனது பொத்திய கரங்கொண்டு மேசையில் அறைந்து சப்தித்தான் இளையவனான போல்.

“இல்லை, இல்லை, என் செல்வ மக்காள், பழிக்குப் பழிவாங்கிப் பழியைத் தேட வேண்டாம்; இது கடவுளின் 6ஆம் கற்பனைக்கு மாறாகும்; உங்கள் ஆத்துமங்களுக்குக் கேடாகும்; பெருங்கேடு உங்களை வந்து சூழும்; எங்கள் குடும்பமே பாழாகும்” என்று அவர்களின் தாய் உள்ளங் கலங்கக் கெஞ்சுவாள்போல் கூறினாள்.

காசியாநகர் புனித றீத்தம்மாளுடைய வாழ்க்கையில் இஃது ஓர் அங்கமாகும். ஒரு சில தினங்களின் முன்னரே அவள் கணவன் தனது வீட்டிலிருந்து ஒரு சொற்ப தூரத்தில் படுகொலை செய்யப்பட்டான். அதற்குள்ளாக அவளுடைய இருபுதல்வரும் அந்தக் கொலைபாதகரைக் கொலைசெய்யச் சதிசெய்கிறார்களேயென்று திகில்கொண்டவளாய்த் திகைத்துநின்று, “போனது போகட்டும், அதையெல்லாம் மறந்து அவர்களை மன்னித்து விடுங்கள்” என்று தான்சொன்னால் அவர்கள் தன்சொல்லைக் கேட்கமாட்டார்கள் என்பதை அவள் நன்கறிவாள். பாவம், அவள்தான் என்னசெய்வாள். “கணவனை இழந்ததோடு கருமம் முடியவில்லை; இப்போது அதிலும் பயங்கரமான காரியம் நிகழப்போகிறதே; தன்னுடைய புதல்வர்கள் பெரும்பழியொன்றில் இறங்கப் போகின்றனரே, என்செய்வேன்” என்று கலங்கினாள்; கலங்கி அழுதாள். பின்னர் சிறிதுவேளை அமைதியாய் இருந்துவிட்டு ஏதோ முடிவுக்கு வந்தவளைப்போல் அந்த இடத்திலேதானே சட்டென முழந்தாட்படியிட்டாள். இருகரங்களையும்மேலே உயர்த்தினாள். இருவிழி நீர்பெருக, “ஆண்டவரே, இந்தப்பழியை என்மக்கள் செய்வதைவிட இந்த உலகிலிருந்தே இருவரையும் எடுத்துக்கொள்ளும்” என்று இரந்துகொண்டாள். அவளுடைய செபம் கேட்கப்பட்டது. சிலதினங்களில் இருவரும் பாயும் படுக்கையுமானார்கள். ஒருவருட காலத்துள் ஒருவர்பின் ஒருவராய் இருவரும் உயிர் நீத்தார்கள்.

இப்பொழுது றீத்தம்மாள் உலகில் தனிமையாக விடப்பட்டாள். அப்போதெல்லாம் கடந்துபோன அவளது வாழ்க்கைச் சம்பவங்கள் அவள் சிந்தனையில் சுழன்று வட்டமிடும். றோமைநகருக்கு வடக்கே 50மைல் தூரத்திலுள்ள றொக்கா பொறெனாவில் அவளுடைய பிள்ளைப்பராயம், அங்கே “சமாதானஞ் செய்வோர்” எனப் பேராக அறியப்பட்ட தருமசிந்தை படைத்த அவள் பெற்றோரின் உத்தமசீவியம், தனது சிற்றறையிலே அவள் வைத்துப் பூசித்துவந்த படங்களின் — நமது ஆண்டவரின் திருப்பாடுகளை நினைவூட்டி உள்ளத்தை உருக்கும் படங்களின் ஞாபகம், அவள் தனது கணவனுடன் நடத்திய மணவாழ்க்கை ஆகியன அவளுடைய மனக்கண்முன் காட்சியளிக்கும். அவளுடைய இல்லற வாழ்க்கைபற்றிக் கூறுவதென்றால், குரூரகுணம் படைத்த கணவன் 18ஆண்டுகளாக ஈவிரக்கமில்லாது அவளைக் கொடுமையாக நடத்திய கயவன். எதிலும் பிடிவாதஞ்

— ஞானம் —

செய்யும் முரடன். என்றாலும் அவள் பொறுமையாய் நடந்து தனது இல்லத்தை இன்புறச் செய்தாள். தன்னிலே அற்ப குறைதானும்கண்டு தன்கணவன் கோபங்கொள்ளாது மிக்க கவனமாக நடந்தாள். சிறியதென்றாலும் தனது கடமைகளைச் சாவதானமாகச் செய்தாள்.

அவள் இல்லத்தில் உத்தம கத்தோலிக்க வாழ்க்கை நடத்தியவள் அவள் ஒருத்தி மட்டுமே. அவளுடைய இரு புதல்வரும் தகப்பனைப்போல் கெட்டகுணமுடையவர்கள். சமய காரியங்களில் அக்கறையற்றவர்கள். ஆயினும் அவளுடைய பரிசுத்த வாழ்க்கை அவளுக்குப் பலனளித்தது. தனது நடத்தைக்காகக் கணவன் அவளிடம் மன்னிப்புக் கேட்டான். தான் கொலைசெய்யப்படுவதற்குச் சிறிதுகாலத்தின்முன் மனந்திரும்பிஉத்தம வாழ்க்கை நடத்திவந்தான்.

இப்பொழுது றீத்தம்மாள் ஒரு விதவையாய், தனிமையாய் இருந்தபோதிலும் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருக்கின்றாள். செபங்கள், உபவாசங்கள், பல்வேறு தவக்கிருத்தியங்கள், தருமச் செயல்களிலே தனது காலத்தைச் செலவழிக்கின்றாள். அவளுடைய அயலவர்களில் அநேகர் பரமஏழைகள். செங்குத்தான குன்றின் பாதைகள் வழியாகக் கீழேஇறங்கி அங்கு வீதிகளின் பக்கமாகவுள்ள சிறு குடிசைகளைத் தரிசித்து அவற்றில் நோய்வாய்ப் பட்டிருக்கும் தாய்மாரின் படுக்கைகள், தலையணைகளைச் சுத்தஞ்செய்து ஒழுங்குபடுத்தியும், பட்டினியால் வாடும் பிள்ளைகளுக்கு உணவூட்டியும் வருகின்றாள். பிறர்நலன் கருதிப் பாடுவதிலும், பிறர்மட்டில் கருணை கொண்டு பிறர்சிநேக தொண்டுகள் செய்வதிலும் கருத்தாய் இருக்கின்றாள். ஏனெனில், இதுதான் நமது ஆண்டவரின் வாழ்க்கையாகும். அவளுடைய அவள் கண்டுபாவித்தாள்.

றீத்தம்மாள் காசியாவிலுள்ள அகுஸ்தீனார்சபைக் கன்னிகாமடத்துக் கோவிலை அடிக்கடி சந்தித்து வந்தமையாலே அம்மடத்திலுள்ளகன்னியாஸ்திரிகளுடன் நெருங்கிப் பழகக் கூடியவளானாள். அங்ஙனமாக ஒருநாள் எதிர்பாராதவிதமாக அவள்மனதில் பிறந்தஎண்ணம் யாதெனில், “ஏன்நான் மடத்தின் முதலாளித் தாயாரைக் கண்டு இதைக் கேட்கப்படாது? இப்பொழுது நான் உலகில் ஒன்றியாகத்தானே இருக்கிறேன்; ஒருவேளை அவர்என்னை ஒரு கன்னியாஸ்திரியாக மடத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடும்” என்பதே. ஒருமுறை அல்ல, மும்முறை அவரைக் கண்டுகேட்டாள். “விதவைகளை அனுமதிக்கச் சபைஒழுங்கு இடம்தராது” என்று ஒவ்வொருமுறையும் அவளுக்குப் பதில்கிடைத்தது.

ஆனால், நமது ஆண்டவர் தமதுபிரமாணிக்கமுள்ள ஊழியக்காரியின் செபங்களுக்குத் தயவோடு திருச்செவிசாய்த்தார். ஒருநாள் இரவு திருமுழுக்கு அருளப்பரும், அகுஸ்தீனாரும், ரொலென்ரீனோவின் நிக்கலாசுமாகிய புனிதர்கள் மூவரும் அவளுக்குக் காட்சியளித்து, அவளை அந்தக் கன்னிகாமடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். பூட்டியிருந்த கதவுகள் காணப்படாத கரங்களால் அவர்களுக்குத் திறந்துவிடப்பட்டன. என்ன அதிசயம்! மறுநாட்காலை மடத்துக் கோவிலில் றீத்தம்மாள் இருப்பதைக்கண்டு கன்னியாஸ்திரிமாரெல்லாம் ஆச்சரியவசத்தரானார்கள். அதன்மேல் அவளை மடத்தில் சேர்க்க எவருமே மறுக்கவில்லை. அவளும் சபையில்சேர்ந்து அதற்குரியவெண்மையும், கருமையுமான கன்னிகாஉடை தரிக்கப்பட்டாள்.

மடத்திலே றீத்தம்மாள் பூரண அமைச்சலுடனும், மேலான பிறர்சிநேகப் போக்குடனும் தனது துறவறவாழ்க்கையை அமைதியாக நடத்துகின்றாள். மிகவும் நுணுக்கமாகச் சபைஒழுங்குகளை அனுசரித்து வருகின்றாள். அதைக் கண்ணுற்றமுதலாளித்தாயார் பிரமித்தவராய்ப் புதிய கன்னியாஸ்திரி புறத்தில் காணப்படுவதுபோல் உளத்திலும் உண்மையிலே ஓர் உத்தமிதானோவென்று அறிந்துகொள்ள ஆசித்து, அவளை ஒருகால் பரீட்சிக்கத் தீர்மானித்தார்.

[வளரும்]

### நன்றி

சதாசகாயமாதா, புனித யூதாததேயு, புனித பியோ சுவாமியார், புனித சவேரியார், புனித றீற்றம்மாள், புனித சூசையப்பர், பிறேக் நகர பால யேசு ஆகியோர்மூலம் திருமுகநாதரிடம் கேட்ட மன்றாட்டு அனுகூலமானதற்கு நன்றியாக வெளியிடுகிறேன். இவர்கள் நாமம் புகழப் படுவதாக.

பக்தன்,
நீர்கொழும்பு.

# இலங்கைக் கத்தோ....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களைச்சேர்ந்த மிஷனரிமார்களும் மேற்றிராசனக் குருக்களோடு ஒன்றுசேர்ந்து செயலாற்றிவந்தனர். ஆனால், தற்போதோ ஒவ்வொரு சபையினரும் தத்தமக்குரிய மேற்றிராசனங்களில் மட்டுமே செயலாற்றி வருகின்ற படியினால் அவர்களது ஆற்றல் அனுபவமெல்லாம் விரயமாகிறதுமல்லாமல், அவர்களின் சேவை சரியான முறையில் பிரயோசனப்படுத்தப் படுவதில்லை. ஐரோப்பாவிலிருந்து இலங்கைக்கு வந்த புதிய மிஷனரிகள் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும் மொழிகளையும் படிக்கவேண்டியவர்களாயிருந்தனர். இப்படியான சூழ்நிலையில் நாட்டு மக்களின் மொழிகளையும், அவர்களின் பழக்கவழக்கங்களையும் அறியாத மிஷனரிகள் மக்களுக்குச் சுவிசேஷம் போதிக்க முடியாது கஷ்டப்பட்டனர். இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையானது தேவாலயங்களை நிறுவி மக்களைப் பக்தி மார்க்கத்தில் வழிநடாத்தி, கல்வித்துறையில் பெரும் புகழீட்டிக் கொண்டிருந்த நேரத்தில் தனக்கே உரித்தாகிய மிஷனரி ஆள்துவத்தை இழக்கத் தொடங்கிற்று.

இப்படியான சூழ்நிலை நிலவிய நேரத்தில் தற்போதைய கத்தோலிக்கசக்தியினர் பிறந்தனர். பின்னர் நிகழ்ந்தனவற்றை ஆராய்வதற்காகத் தற்கால வரலாற்றில் நுழைய எனக்கு விருப்பமில்லாதிருந்த போதிலும் நான் ஏற்கனவே இக் கட்டுரையில் ஆராய்ந்து தொகுத்தனவற்றால் பெறப்படும் இம் முடிவைமட்டும் கூறி இக் கட்டுரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். திருச்சபையின் முன்னேற்றம், வெற்றிகள், இரட்சணிய அலுவலில் காட்டிய திறமை ஆகிய அத்தனையும் மனிதனால் கையாளப்பட்ட வழிவகைகளில் தங்கியிருக்கவில்லை. அவைகள் ஆண்டவனின் திருக்கரங்களிலேயே தங்கியிருந்தன. உலகம் திருச்சபையை உண்டாக்கவில்லை; உலகத்தினால் திருச்சபையை அழிக்கவும் முடியாது. மனிதனது ஞானத்தையும், நல்லெண்ணத்தையும் அடிப்படையாகக் கொண்டே உலககாரியங்களைத் திருச்சபை கவனிக்க வேண்டுமென இறைவன் விரும்புகிறார். திருச்சபைச் சரித்திரத்தில் மக்களின் மனப்போக்கும், குருக்களின் குணதிசயங்களும், மனித பெலவீனங்களும் இடம்பெறுவதை ஒருபோதும் தவிர்க்க முடியாது. ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு தம்மைத் தாமே காலத்திற்குக்காலம் திருத்திக்கொள்வது மிகவும் அவசியமாகும். ஆசாரத்திற்குரிய யோசேவாஸ், அருட்திரு. யாக்கோமே கொன்சால்வேஸ், அதிமேற்றிராணியார் பொஞ்சீன், மொன்சிஞ்ஞோர் செலஸ்சி போன்றவர்கள் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைச் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றனர். இலங்கையில்வாழ்ந்த தியானசபைக் குருக்களின் பழக்கவழக்கங்களையும், அவர்கள் கையாண்ட முறைகளையும் தற்காலத்திருச்சபையினர் கையாளும் முறைகளோடு சேர்த்து ஒப்பிட்டு ஆராய்ந்தாற்றான் வரலாற்றினால் எமக்குப் பயனுண்டாகும். நடந்தேறிய வரலாற்றின் பாடங்கள், நடப்பனவற்றிற்கும் நடக்கவிருப்பனவற்றிற்கும் வழிகாட்டியாக அமையாவிட்டால் வரலாற்றினால் பயன்தானென்னே!

(முற்றும்)


## விளம்பரம்

### ஆசிரியர் தேவை

கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சைக்கு (G. C. E. Ordinary) ஆயத்தம் செய்யும் மாணவர்களுக்கு பின்வரும் பாடங்கள் எவற்றிலேனும் கல்வியூட்டத் தகமை பூண்ட ஆசிரியர் தேவை.

1. தமிழ்ப் பாஷை
2. தமிழ் இலக்கியம்
3. ஆங்கில பாஷை
4. ஆங்கில இலக்கியம்
5. தூய கணிதம்
6. எண் கணிதம்
7. உயர் கணிதம்
8. பௌதீகவியல்
9. இரசாயனம்
10. உயிரியல்
11. சரித்திரம்
12. குடியியல்
13. புவியியல்
14. பொருளாதாரம்

விண்ணப்பங்களை பின்காணும் முகவரிக்கு ஆனி 11-ம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பிவைக்கவும்.

DIRECTOR,
Youth Study Centre,
Post Box 2, JAFFNA.



● 1944-ம் ஆண்டு நாஸிய ஜேர்மனியர்களிடமிருந்து றோமைநகரை விடுவித்த ஐக்கிய அமெரிக்கதேச 5-வது சேனையின் முன்னாள் தளபதியான ஜெனறல் மாக் கிளாக் அவர்கள் வத்திக்கான் மாளிகைசென்று சின்னப்ப பாப்பரசரின் பேட்டிபெற்றிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

# மனிதா சிந்தித்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி

கிறீஸ்துவின் திருவிலா நீர் ஓட வேண்டும். உன் கண்களில் கிறீஸ்துவின் சாந்தஒளி பிரதிபலிக்கவேண்டும். உன் உதடுகளில் கர்த்தர் கற்பித்த செப ஓசை முழங்க வேண்டும். உன் நாடி நரம்புகளின் உயிர்த்துடிப்பு கிறீஸ்துவாக இருக்க வேண்டும். உன் ஆன்ம பசியின் உணவு கிறீஸ்துவின் சரீரமாக இருக்க வேண்டும். உன் இதய சாந்தி கிறீஸ்துவின் வாழ்க்கைச் சித்திரமாக இருக்க வேண்டும். கிறீஸ்துவில் — கிறீஸ்துவிற்குள் கிறீஸ்துவோடு ஒன்றித்து, வேரூன்றி, விசுவாசத்தின் ஸ்தம்பமாய், கலங்கரை விளக்கமாய் கிறீஸ்தவ தூய அன்பை உடையவனாக நீ வாழவேண்டும். மனிதா, இதுவே உன் சிந்தையில் மலர்ந்த சிந்தனையாக இருக்கட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புள்ள தம்பி-தங்கையரே வணக்கம்!**

இந்த ஆனிமாதம் திரு இருதய வணக்கமாதம். திரு இருதய ஆண்டவர் உங்களிடம் என்ன கேட்கிருர்? தம்முடைய எல்லையற்ற நேசத்திற்கு — சுவாலித்து எரியும் இணையற்ற



அன்பிற்குப் பதில் நேசம் காட்டும்படி கேட்கிருர். தம்மை அறியாதவர்களும், நேசியாதவர்களும் தம்மை மறந்து செய்கிற நிந்தைகளுக்கு ஒரு பரிகரிப்புச் செய்யும்படி கேட்கிருர்.

ஆகையால், சகோதரரே! திருஇருதயநாதருக்கு உங்கள் இருதயப் பூர்வமான நேசத்தைக் காட்டுங்கள். உங்கள் நாளாந்த கடமைகளையும், படிப்புகள், விளையாட்டுக்களையும் அவருக்கு நேசமுடன் காட்டும் எண்ணத்துடன் நிந்தைப்பரிகாரமாக நிறைவேற்றி வாருங்கள்.

— அண்ணு

## தேற்றிடும் இறைவன்

[ செ. மொத்தம் போல் — வங்காலை ]

1. இறையினுள் இறைவன் ஆவி
இரட்சகர் பிறப்பிற் காவி
மறைமுதல் உயிரின் ஆவி
வரந்தரும் கனியின் ஆவி
நிறைஎழு கொடையின் ஆவி
கிருபர்முன் பேசும் ஆவி
அறையினுட் புகுந்து சீடர்
அணுகிய ஆவி தேவா!

2. தேற்றிடும் இறைவன் ஆவி
திரித்துவ மூன்ரும் ஆளாம்
போற்றிடுந் தந்தை யோடு
புறவுரு வான ஆவி
மாற்றிடும் மனத்துட் தீயால்
மறைமுழுக் கான போது
ஏற்றிடும் இதய பாசம்
எழுந்தருள் நேச தேவா!

3. திரண்டவர் செபித்த போது
திசையெலாம் அதிரச் சத்தம்
வரண்டவர் உளமே அஞ்ச
வானமு மிடித்து மோத
மிரண்டவர் அறையி னுள்ளே
மிகுவழற் பிளம்பு நாவும்
திரண்டவர் சீடர் மீதே
திடமனத் துணிவே யானுர்.

4. வல்லவர் எழுந்த செய்தி
வழூத்திய சீடர் பேச்சு
நல்லவர் மொழியிற் தாமே
நயந்திட உணரச் செய்த
சொல்லவர் அனுப்பும் தேவன்
சுருதியில் வழுவாத் தேவன்
பல்லவர் உளமே என்றும்
பலகொடை அளித்துக் காப்பார்.

3. மலையருள் மொழியின் தேவன்
மனம்செயல் வாக்குச் சீவன்
நிலையருள் வாழ்வை எண்ணி
நித்தமும் அமைதி நண்ணி
கலையருள் தூய ஆவி
கத்தனை அனுப்பி எம்மை
உலையருள் தங்க மாக்க
உறுதிபூ சுதல்தந் தாரே.

# மனிதா, சிந்தித்தாயா?

சிந்தனை, சிந்தனை, சிந்தனை! ஓயாத சிந்தனை! நீ மானிடனுக இம்மண்மீதில் உதித்த வேளை தொடங்கி உயிர் பிரியும் வரை சிந்திக்கின்ருய். அப்படி என்னதான் உன் சிந்தையில் உதித்த சிந்தனை! இப்பிரபஞ்சத்தில் மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் எழுப்ப வேண்டும்; தலைமுதல் காலீருகப் பொன்னுபரணங்கள் மின்ன வேண்டும்; வட்டிக்குமேல் வட்டியாகப் பணம் சம்பாதிக்க வேண்டும்; காமவலையில் சிக்குண்டு மூழ்கித் திளைக்க வேண்டும்; இவைகள்தான் உன் சிந்தனையைக் கவர்ந்த சிந்தனைகள். மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை என்ற மூன்று ஆசைகளை மட்டுமே சிந்திக்கின்ருய். எப்பொழுதாவது உன்னைப் படைத்து உனக்கு இம்மைக்கும், மறுமைக்கும் தேவையானவைகளை இடைவிடாது அருளும் அன்பர் யேசுவைப் பற்றிச் சிந்தித்ததுண்டா? கேவலம்! உனக்கு உண்ண வேண்டிய உணவும், உடுக்கத் தேவையான உடையும் இருக்க ஓர் மனையும் போதாதா?

"உண்டிருக்க நல்லன்னம்
ஊர்நடுவே ஓர்வீடு
கண்டிருக்க நன்மக்கள்
காதலிக்கப் பெண்ணெருத்தி
கற்றுணர ஓர் தோழன்
காவலுற ஓர் தெய்வம்."

இக் கவிதையே உனக்கு வேண்டியவைகளைத் தெளிவாக்குகின்றதல்லவா? இவைகள் எல்லாவற்றிலும் மேலாக நீ சிந்திக்க வேண்டியன ஏராளமாயுள. "உன்னைப் போல் உன் அயலவனை நேசி" என்று உன்னைப் படைத்த பரமன் கூறினுரல்லவா? இதை நீ உன் வாழ்நாளில் ஒரு கணமாவது சிந்தித்ததுண்டா? இதற்கு மாருகத்தெருத்திண்ணைகளிலே இரண்டொருபேரைக்கூட்டி அயலவனின் நற்பெயருக்குக் குந்தகம் விளைவிக்கின்ருய். ஆவலாதி அவதூறு பேசுகின்ருய். இம்மட்டோ? ... அவனின் நல் வாழ்வுக்குமே ஒரு முடிவு காண்கிருய். இப்போது சிந்தித்துப்பார்; உன் சிந்தனை, வாக்கு, கிரிகைகள் பரலோகத்துக்கு அடுத்தவைகளாக இருக்கின்றனவா?

தேவனிடத்தில் மகிமை பாராட்டவேண்டிய நீ, நான், எனது என்றெல்லாம் மமதையில் வாழ்கின்ருய். பரீட்சையில் சித்திபெற்றபோதும் வேலைவாய்ப்பு வந்தபோதும் நாலுபேரைக் கூட்டி, திறமையான உன் சித்தியையும், வேலை வாய்ப்பையும் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்கின்ருய். இவைகளை எல்லாம் உனக்கு அருளிய அன்பர் யேசுவை ஒரு கணமாவது நீ சிந்தித்தாயா? ஆராதித்தாயா? நன்றி கூறினுயா? அவரில் மகிமை பாராட்டினுயா? உனக்கு எல்லா நன்மைகளையும் செய்தாரே. அவருக்காக நீ என்ன செய்திருக்கிருய்? அவர்மட்டில்— சத்திய கடவுளின் மட்டில் உன் இருதயத்தில் ஒரு நேசச் சுடராவது வீசியதுண்டா? உன் கல் மனம் ஒருசிறிதாவது கசிந்ததுண்டா? உன் அசட்டைத்தனம் அற்பமேனும் நீங்கியதுண்டா?

மண்ணோடுமண்ணுக மண்ணுக்குள் மடிந்துவிடும் இப் புன்புலால் யாக்கைக்குப் பொன்னுலான ஆபரணங்கள் எல்லாம் பூட்டி மின்னி மிளிர வேண்டும் என்றெல்லாம் சிந்திக்கின்ருய். ஆனுல், சாவைப் பற்றி உன் வாழ்நாளில் சிந்தித்ததுண்டா? இன்றுஇருப்பவரை நாளை காணேம். எங்கு சென்ருர் என்ருல் மண்ணுள்ளே மடிந்துவிட்டார் என்று கூறுகின்ருர். அப்படித்தான் நீயும். நீ நினையாத நேரத்தில் — காத்திராத வேளையில் மின்னலைப் போல் மரணம் உனக்கு வரும். அப்போது கொண்டு செல்வது பொன்னல்ல, பொருளல்ல, மண்ணல்ல, உன் பாவ புண்ணிய கனுகனமே. இவ்வுலகம் உன் சொந்த வீடல்ல. மனிதா, நன்ருகச் சிந்தனைசெய்! பரலோகமே உன் நித்திய இல்லம். அங்கே எல்லையில்லாத இன்பமுண்டு. இவ்வுலகமோ ஒரு நாடக மேடை. அதிலே நீ ஒரு கதாபாத்திரம். உனக்கும் இவ் வையத்திற்கும் உள்ள உறவு அவ்வளவுதான். உன் ஈடில்லா இன்பம் வான லோகம். அங்கே நோய் நொடி இல்லை, சாவு, பிணி, மூப்பு இல்லை. துக்கமில்லை – துயரமில்லை – துன்பமில்லை. இத்தகைய மகிழ்ச்சிகரமான பரலோக வாழ்வு உன் கற்பனையில் உதித்ததுண்டா? சற்றுப் பொறுமையாக இவைகளை எல்லாம் சிந்தித்திருக்கிருயா? இவ்வுலக வாழ்வு ஒரு காட்டாற்று வெள்ளம். அதை நம்பமுடியாது. பெருக்கெடுக்கும்போது எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக்கொண்டு சென்றுவிடும்.

அறுசுவை உண்டிகளின் மீது ஆசைகொள்கிருய். போசனப்பிரியத்தில் மூழ்கி அதுவே சொர்க்கம் என எண்ணுகிருய். கேவலம்! உன் அன்பர் யேசு நாற்பது இரவும், நாற்பது பகலும் வனந்தரத்தில் உபவாசமாய் இருந்ததைப்பற்றிச் சிந்தித்தாயா? நாளை மடிந்துபோகும் சரீரத்தில் ஏன் இவ்வளவு அக்கறை? ஆரும், ஒன்பதாம் கற்பனைக்கு விரோதமான பாவங்களைச் செய்யக் கூட முன்வருகின்ருய். காதல், காதல் என்று கூறிக் காமப் பசாசை அரவணைக்கின்ருய். கைப்பிடித்த பத்தினியை நீதிமன்றத்தில் நிறுத்தி அவமானப்படுத்திவிட்டு பிறன்மனை விரும்புகின்ருய். தேவனுல் படைக்கப்பட்ட உன் அவயவங்கள் எல்லாம் பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமென்றும், தேவனின் ஆலயம் என்றும் சிந்தித்துப் பார்த்திருக்கின்ருயா? கண் படைத்தான் நீ தேவனை நோக்கி வணங்க. கால் படைத்தான் அவரண்டை நீ அணுக. கை படைத்தான் கரங்கூப்பி வணங்க. நா படைத்தான் ஜீவிய அப்பத்தை ருசிக்க.

கடைசியாக உன் சிந்தையில் பதியவேண்டியவற்றைச் சிந்தித்துப்பார். நீ கிறீஸ்துவை அணிந்த கிறீஸ்தவன். கிறீஸ்துவின் சாயலாகக் கிறீஸ்துவால் படைக்கப்பட்டவன். உனது இரத்தத்தில்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

செல்வி இராஜேஸ்வரி ஆபிரகாம் — தும்பளை

## நீங்கள் பெரியவர்கள்

நீங்கள் சிறுவரா? இல்லை நீங்கள் பெரியவர்கள்; இதையிட்டுப் பெருமைப் படுங்கள். இன்று உங்களைப்போல் சிறுவர்களாயிருந்தவர்கள் தமது பிற்காலத்தில் உலகம் போற்றும் பெரியோராய்த் திகழ்ந்தனர். உலகப்புகழ் பெற்ற நெப்போலியனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களலல்லவா? 42 பிள்ளைகள் உள்ள வகுப்பில் (41) கடைசிக்கு முந்திய இடம் பிடித்தவர் தான் நெப்போலியன். ஆனுல் அவருக்கு முந்திய 40 பிள்ளைகளைப்பற்றி உலகிற்கே தெரியாது. உலகப் புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் பெர்ணுட் ஷா வைப்பற்றி தெரியுமா? ஆக 5 வருடங்கள் தான் பள்ளிக்குச்சென்ருர். ஆரம்ப எழுத்தாளனுக 9 வருடங்கள் விடாமல் எழுதினுர். இன்று உலகப்புகழ் பெற்று விளங்குகிருர்.

இதே போன்று தான் இன்று பெரியோராயும் அறிஞராயும் புகழப் படுபவர்களது முயற்சிதான் அவர்களை முழு மனிதர்களாக்கியது. முயற்சியினுல் தான் முன்னேற முடியும். விடா முயற்சியினுல் போரில் வெற்றி பெற்ற ஜெருபேட் புரூஸ் என்பவரைப் பற்றி நாம் படித்திருக்கிறேம். ஏன் கிறீஸ்து கூட சிறுவர்க்குப் பெருமையளித்துள்ளார். சிறுவரை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடை செய்யாதேயுங்கள்; விண்ணரசு அவர்களுடையது. ஆம், சிறுவரே! நீங்கள் இதனை உணருங்கள். உங்கள் பெருமையைப் பேணுங்கள். அனைவர்க்கும் நற்பணி புரியுங்கள்.

இ. பே:

## மனிதா, உன் மதிப்பு இதுதான்!

மனிதனே! உண்மையில் நீ மனிதன் தானு? உன் உடலில் ஒட்டியிருக்கும் கூட்டுப் பொருட்களை விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். இதோ அந்த விபரங்கள்:

உடலில் நீர் 59 சதவிதம்.

உடலில் கொழுப்பு ஏழுபார் சோப் செய்யப் போதுமானது.

உடலில் உள்ள கரி 9,000 பென்சில்கள் செய்யப் போதுமானது.

2,200 தீக்குச்சிகள் செய்யப் போதுமான பொஸ்பரஸ் இருக்கிறது.

2 அங்குல ஆணிசெய்யப் போதுமான இரும்பு இருக்கிறது.

ஒரு வாளி சுண்ணும்பும் இருக்கறது.

கால்ருத்தல் கெந்தகம், ஒரு கரண்டி மக்னீசியம் என்டனவும் இருக்கின்றன.

மனிதா, [illegible] தா?

சேகரித்தவர்: இ. பே:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசிசியின் புனித காட்சி

(வண. அருட்திரு மைக்கல் லண்சா, O.F.M., Matale)

கிறீஸ்தவ உலகிலே, புனித பிரான்சிஸ் அசீசியாரைப் போல் மிகவும் நேசிக்கவும், அறியவும் பட்டபுனிதர்கள் சிலரேயாவர். அன்றியும், இலங்கைக் கத்தோலிக்கரில் பெரும்பாலார் இப்புனிதரையும், அவர் ஏற்படுத்திய மூன்று சபைகளையும்பற்றி அறியப் போதிய காரணிகள் இருந்தும், அவற்றை அவர்கள் முழுவதுமே அறியாதவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே, இக்கட்டுரையின் நோக்கம்: புனித பிரான்சிஸ்குவின் சீவிய வரலாற்றையும், முதல்முதல் நம் தாய் நாட்டில் கால்வைத்து, நம் தேசமக்களுக்கு நற்செய்திகளை (சுவிசேஷம்) போதித்த அவருடைய மைந்தரும், குருக்களுமாகிய சகோதரர்களின் (Friars Minor) மனப்பான்மைகளையும் உழைப்பையும் அறியச் செய்வதாகிய தேவையைப் பூர்த்திசெய்வதேயாகும்.



புனித பிரான்சிஸ்குவானவர், கி. பி. 1182-ல், எல்லாராலும் நன்கு அறியப்பட்ட, பெற்றாரிடம்பிறந்தார். இவர் தந்தை வர்த்தகத்தில் பிரக்கியாதி பெற்றுவிளங்கிய ஓர் இத்தாலியன்; "பியத்திரோன் பெர்னார் தோனே" என்னும் நாமம் உடையவர். இவர் அக்காலத்திலே பேர்போன பிரான்சு தேசப் பட்டுப்புடவைக்காக, தன் தேச உயர்ந்த உரோமத்தைக் கொடுத்து வியாபாரம் நடத்திவந்த பெரும் வியாபாரியும், தனவந்தவருமாவர். "புரோவின்சால்" என்னும் சங்கீதத் திறமைபெற்ற நாட்டைச் சேர்ந்த குடும்பத்திலே, தேவபக்தியும், நல்லொழுக்கமுமுடைய "பிக்கா" என்னும் பெண்மணியை, தன் மனைவியாகக்கொண்டவர். இதனால், நம் புனிதரும் இயல்பாகவே நாகரிகமும், பாட்டுத்திறமையுமுடையவராக விளங்கினார். இயற்கையிலேயே சந்தோஷத்துக்குரியவராய் இருந்தமையினால், அசீசி நகர் உயர்குல வாலிபர்குழு முழு விருப்பத்தோடு அவரைத் தமது சங்கீத அரசராகத் தெரிந்து கொள்ளலாயினர். இதனால் அவர் அவர்களுக்குத் தலைவரானார்.

இவ்வாறாக, இப்புனிதர் உலகப் போக்குடையவராய் இருந்த போதிலும், இவரிடம் உதாரகுணமும், பயபக்தியும் இருந்தன. ஒரு நாள் இவர் தன் இருபதாம் வயது ஆரம்பத்திலேயே, இடிந்து விழும் தருவாயிலிருந்த "புனித தமியானோ" என்னும் தேவாலயத்தில் செபித்துக் கொண்டிருக்கையில் மனந்திரும்பலானார். இதற்கு ஒரு வருடத்தின்பின்னர், "போர்சியோங்குலா" எனும் சிற்றாலயத்தில் வேண்டுதலாய் இருந்தவேளை, பூரண தரித்திரத்தினதும், தற்பரித்தியாகத்தினதும், மேலான அழைத்தலைப் பெற்றுக் கொண்டார். இவருடைய தரும நடபடிக்கைகளைப் பார்த்து, மதிப்புக்குரிய இருவர் (புனித பேர்னார்து, புனித கத்தானி இராயப்பர்), அவரின் முதற் சீஷராயினர். அதன் பின்பு, துரிதமாக மற்றும்பலர் இவரைச் சேர, இவர் சீடர், நமதாண்டவரின் சீடரைப்போல் பன்னிரண்டு பேராயினர். அதன் பின்பு புனிதர் தம்சீடர் பன்னிருவரோடு உரோமாபுரிக்குச் சென்று, தமது சிறிய ஒழுங்குகளை ஏற்று உறுதிப்படுத்துமாறு, மூன்றாம் மாசில்லாமணி (மூன்றாம் இன்னோசென்ற்) பாப்பரசரைக்கேட்டார். முதலில் பாப்பிறை அதற்கு இணங்காதிருந்தாலும், பின்னர் தேவஏவுதலால் அதற்கு இணங்கலானார். இதனால் மகிழ்ச்சியுற்ற புனிதர், தம்மவரோடு அசிசிப்பதிக்குத் திரும்பிவந்து, அடுத்த பட்டினங்களிலும், கிராமங்களிலும் பிரசங்கிக்கத் தொடங்கினார். இவர் பிரசங்கத்தைக் கேட்ட பதினெட்டு வயதுக்கன்னிகையும், அசிசிப் பட்டணத்து உத்தம கோத்திரத்தாருமான கிளாரம்மாளும், புனிதரைப் பின்பற்றி அவரின் இரண்டாம்சபையின் (Poor-Clares) முதற் தாயுமானாள். (இவள் சபையினர் இன்று நம் இலங்கையில் தேவத்தை என்னும் ஊரில் வசித்துக் கடும் தரித்திரத்திலும், செபத்தாலும் வாழ்ந்து வருகின்றனர்.)

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை

ஆங்கில மூலம்: மறைத்திரு. சைமன் கிறகோரி பெரோரா, யே. ச.
தமிழாக்கம்: நெடுந்தீவு, ம. மரியதாசன்.

[தொடர்ச்சி]

இதற்கிடையில் கிழக்கிந்திய திருச்சபையின் அமைப்பு வேலைகளில் பரிசுத்த ஸ்தானம் அக்கறைகாட்டத் தொடங்கியது. கத்தோலிக்க மிஷனரிகள் தேசப்பற்று, நாட்டுப்பற்றுள்ளவர்களாக மாறுவதைத் தடுப்பதற்காகவும், அவர்களிடையே காணப்பட்ட தேசிய போக்கினை அகற்றுவதற்காகவும் 1620-ம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேதப்பரப்புதற் சபையானது, மிசனரிவேலைக்குரிய ஆட்களையும், ஏனைய தேவைகளையும் கொடுத்துதவி தனது நியாயமானகடமைகளை நிறைவேற்றாது 'பாட்றோடோ' சபையின் உரிமைகளையும் சலுகைகளையும் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருந்த இந்திய மிஷனரிகள் சபையைப் போர்த்துக்கல் நாட்டுக்குரிய சுதந்திர அமைப்பாக மாற்றுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தது. பாப்பாண்டவர் ஆவதற்கு முன்னர் வேதப்பரப்புதற் சபையின் தலைவராகக் கடமையாற்றிய 16-ம் கிறகோரியார், விக்காறியேல் அப்போஸ்தலர்களை நியமிப்பதற்குத் தீர்மானித்தார். எனவே, வேதப்பரப்புதற் சபையினமூலமாக மிசனரிகள் சபைகள் முழுவதையும் பரிசுத்த ஸ்தானத்தின் நேரடியான மேற்பார்வையின்கீழ் கொண்டுவரக் கூடியதாயிற்று.

பரிசுத்த பாப்பரசர் தியான சபையைச்சேர்ந்த இருவரை ஒருவருக்குப்பின் ஒருவராக விக்கார் அப்போஸ்தலர்களாக இலங்கையில் நியமித்தார். கல்விக்கூடங்கள் தேவைப்பட்ட காரணத்தினால் இலங்கை மக்கள் — குறிப்பாகப் பள்ளிக்கூடங்களின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த கத்தோலிக்க பறங்கியர்கள் ஐரோப்பிய குருமாரை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறுகோரி கிளர்ச்சி செய்துகொண்டிருந்தனர். தியானசபையினர் நசுக்கப்பட்ட படியினாலும், கோவை வாழ் மக்கள்மீது வெறுப்புணர்ச்சி வளர்ந்தமையினாலும் குருமாரின் வருகை தடைபட்டதைக்கண்ட கலாநிதி கயத்தானோ அந்தோனியோ அவர்கள் ஐரோப்பிய குருமாரை இங்கு அனுப்பிவைக்குமாறு கோரி வேண்டுகோள் விடுத்தார். இவரது வேண்டுகோளின்படி குருமார் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இலங்கைபோன்ற பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டுக்கு அனுப்புவதற்காக மிஷனரிகளைத் தேடுவதென்றால் அக்காலத்தில் அது ஓர் இலகுவான காரியமாக இருக்கவில்லை. வேதப்பரப்புதற் சபையினர், பலதரப்பட்ட மிஷனரி சபைகளையும் இந்தியாவிலுள்ள ஏனைய மாகாண சிரேஷ்டர்களிடம் ஒப்படைத்தாராயினும், இலங்கையின் நிர்வாகம் போர்த்துக்கல் அரசனால் நசுக்கப்பட்ட தியானசபையினரின் கையிலேயே இருந்தது. இந்திய தியான சபையினர் நிர்வாகம் செய்துவந்த பிரித்தானிய குடியேற்ற நாட்டைச்சேர்ந்தபகுதிகளில் கடமையாற்றுவதற்காக மிஷனரிகளைத் தேடுவது கஷ்டமாகவிருந்தது.

1842-ல் இத்தாலியதியான சபையைச் சேர்ந்த ஹொறட்டியோ பெத்தாச்சினி என்பவரும், 1844-ல் அன்று றெய்னோட்என்ற பிரஞ்சுக்காரரும், 1845-ல் சில்வேஸ்திரியன் பெனடிக்ரன் சபையைச் சேர்ந்த யோசேப் மரியா பிறேசி என்பவரும், ஸ்பானிய சிஸ்ரேறியன் சபையைச் சேர்ந்த வுளோறியானோ சாசியா, வுளோறியானோ ஒறுனா என்பவர்களும் வேதப் பரப்புதல் சபையினரால் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களைப் பின்தொடர்ந்து இத்தாலியைச் சேர்ந்த கிஸ்தாறினி, காசினெல்லி, மோளா ஆகிய மூன்று மேற்றிராசனக் குருக்களும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஆனால், குருமாரோ இன்னும் மதிகமான அளவில் தேவைப்பட்டனர். கலாநிதி கயத்தானோ அந்தோனியோவிற்கு முதலாவது உதவியாளராகப் பதவியேற்ற கலாநிதி பெத்தாச்சினி அவர்கள் 1849-ல் கொழும்பிலிருந்து பிரிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பகுதிக்கு மாகாண சிரேஷ்டராக நியமனம் பெற்றார். மிஷனரிகளைத் தருவிப்பதற்காக இவர் ஐரோப்பா சென்றபோது அமலமரி தியாகிகளின் உதவியை நாடினார். இச்சபையைச்சேர்ந்த சிலர் இவருடன் யாழ்ப்பாணம் வந்து சம்பத்திரிசியார் கல்லூரியை ஆரம்பித்தனர். அமலமரி தியாகிகள் யாழ்ப்பாண மாகாண நிர்வாகத்தைக் கையேற்றுக்கொண்டதும் போதிய மிஷனரிகளும் வந்து சேர்ந்தனர். எனவே, இங்கிருந்த மேற்றிராசனக் குருக்கள் தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

கொழும்புப்பகுதிக்கு அநேகமான குருப்பிரசாதிகள் தேவைப்பட்டனர். கலாநிதி கயத்தானோ அந்தோனியோவின் இடத்திற்கு அவரது உதவியாளரான சில்வேஸ்திரியன் பெனடிக்ரன் சபையைச் சேர்ந்த கலாநிதி பிறேசி அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர் தமது சபையினர்க்கு உதவி கோரி விண்ணப்பித்தபோது அதிகமான ஐரோப்பிய மேற்றிராசனக் குருக்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் இங்கு வந்ததும் நல்லாயன் கன்னியர்மடம், புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, அச்சியக்கிரசாலை ஆதியன கொழும்பு மாநகரில் ஆரம்பிக்கப்பட்டன. சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரண்டுமொழிகளிலும் வாரப் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. புனித லூசியாள் தேவாலயத்தில் விஸ்தரிப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், போதிய குருப்பிரசாதிகள் இல்லாதிருந்தனர். இந்தியர், இலங்கையர், ஸ்பானியர், இத்தாலியர் போன்ற தேசிய வேறுபாடுகளும், பெனடிக்ரன், அமலமரி தியாகிகள், தியானசபையினர், மேற்றிராசனக் குருக்கள் போன்ற பலவகைப்பட்ட சபைகளும் குருக்களிடையே காணப்பட்டமையினால் அவர்கள்மத்தியில் கொள்கை அடிப்படையிலான ஒற்றுமை நிலவவில்லை. உள்ளூர் வாசிகளைக் குருப்பிரசாதிகளாக்குவதற்காக வேதப்பரப்புதல் சபையினர் முதல்தரமான ஆண்கள் கல்லூரியை ஆரம்பிக்குமாறு தூண்டிக்கொண்டிருந்தனர். கலாநிதி பக்னானி அவர்கள் மாகாண சிரேஷ்டராக நியமனம் பெற்றதும் குருமாரை அனுப்பிவைக்குமாறு கோரி தனது சபையினருக்கு வேண்டுகோள் விடுத்தார். இத்தாலியிலேற்பட்ட கலகங்களினால் குருக்களெவரும் இங்கு வர முடியாத நிலையிலிருந்தனர். இவ்வேளையில் இவர் தனது நிருவாகப்பகுதிகள் சிலவற்றை அமலமரி தியாகிகளிடம் ஒப்படைத்துவிட்டு, மத்திய மாகாணத்தையும் ஊவா மாகாணத்தையும் தனது அதிகாரத்தின் கீழ் வைத்துக்கொண்டார். கண்டிப்பகுதியைச் சில்வேஸ்திரியன் பெனடிக்ரன் சபையினர் பொறுப்பேற்றனர். கொழும்பு மறைமாவட்டம் அமலமரி தியாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டதை ஆட்சேபித்த மேற்றிராசனக் குருக்கள் அம்மாவட்டத்தை விட்டு வெளியேறினர். எப்படியிருந்தபோதிலும் 1887-ல் மூன்று மேற்றிராசனப் பிரிவுகளுக்கு எல்லைகள் வகுக்கப்பட்டு தலைமைப் பீடமும் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டது. முன்னேற்றம் எதுவுமின்றி மிஷனரி வேலைகள் பெருமளவில் தேக்கமடைந்துள்ளதைக் கண்ட பரிசுத்த ஸ்தானம் தென் மாகாணம், கீழ் மாகாணம், சப்பிரகாமுவ மாகாணம் ஆகிய மூன்றையும் முன்பிருந்த மேற்றிராசனங்களிலிருந்து பிரித்தெடுத்து அவற்றினைத் திருமலை, காலி ஆகிய இரண்டுமேற்றிராசனங்களாக்கி அவைகளை யேசு சபையாரிடம் ஒப்படைத்தது.

இவ்வாறாக மேற்றிராசனப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, குருக்களும் நிருவாகப் பகுதிகளும் கைமாறியவுடனே சில கஷ்டங்கள் திருச்சபையை எதிர்நோக்கத் தொடங்கின. முதல்தரமான ஆண்கள் கல்லூரி இல்லாத காரணத்தினால் சுதேசிகளைக் குருக்களாக்குவதில் சிரமமிருந்துகொண்டு வந்தது. ஒவ்வொரு மேற்றிராசனப் பிரிவுக்குரிய நிருவாக அலுவல்களை மட்டுமே சம்பந்தப்பட்ட மேற்றிராசனத்திற்குப் பொறுப்பான சபையினர் கவனித்துவந்தபடியினால் ஒவ்வொருசபையாரும் தாம்ஆரம்பித்த விசேஷ முயற்சிகளினால் எவ்வித பயனுமடையாதிருந்தனர். போர்த்துக்கீசர் காலத்தில் கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு சபை

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்றுண்டு நினைவலைகள்

# பேராலயத்தில் படுகொலை

இற்றைக்குச் சரியாக எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால். இங்கிலாந்து தேசத்தில், கன்ரர்பரி அதிமேற்றிராசனம் ஆங்கில நாட்டின் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடமாகத் திகழ்ந்த வேளை.

பாப்பரசரின் நல்லாசியுடன் ஆங்கிலநாட்டு மன்னனுகை இரண்டாவது என்றி செங்கோலோச்சிக் கொண்டிருந்தான். எனினும், ஆங்கில நாட்டுத் திருமறை அதிகாரிகட்கும், அரசனுக்குமிடையில் சுமுகமான உறவு இருக்கவில்லை.

பல்வேறு பிரச்சனைகளும் இந்த உறவுக்கு மேலும் மேலும் பிளவினை உண்டாக்கின. அப்பிளவு ஒருநாள் வெடித்தது. அதன் எதிரொலி கேட்டு ஐரோப்பிய நாடுகளனைத்தும் நடுநடுங்கின.

ஆம். 1170-ம் ஆண்டு மார்கழிமாதம் 29-ந்திகதி. கன்ரர்பரியின் பேராயர் தோமஸ் பெக்கட் ஆண்டகையின் உள்ளம் அன்றுதினம் நடக்கவிருக்கும் பயங்கரமொன்றை அவருக்கு உணர்த்திக்கொண்டிருந்தது. சில தினங்கட்கு முன்னர் தாம் படுகொலை செய்யப்பட்டதாகக் கண்ட கனவை நினைவுகொண்டார் பெக்கட்.

கலங்கி நடுங்கவில்லை அவர். நேர்மை, நீதி, திடசித்தம், அஞ்சாமை படைத்தவர் அவர். இறைவனுக்கும், இராயனுக்கும் ஏககாலத்தில் தொண்டாற்ற முடியாதென்பதை அவர் அறிவார். இரண்டு தோணிகளில் கால் வைக்க அவர் விரும்பவில்லை.

மேற்றிராணியார் என்ற வகையில் திருச்சபையின் உரிமையை, நிலைநாட்டும் பொறுப்பை விட்டுக்கொடுக்க அவர் மறுத்துவிட்டார். விளைவு? சாதாரண அமைச்சனுக இருந்த தன்னைப் பேராயர் பதவிக்கு உயர்த்திய அரசன் என்றியின் சினத்துக்குள்ளானுர்.

அன்றுமாலை. ஆலயத்தின் பிரதான பீடத்துக்கு அண்மையில் துறவிகள் மாலையாராதனை பாடிக்கொண்டிருந்தனர். திருவஸ்திரங்கள் அணிந்து, திருமுடிதரித்து, செங்கோல்தாங்கி விசுவாசமிக்க தனது ஊழியர்கள் இருவரும் வழி நடாத்த, பீடத்துக்கு வந்து சேர்ந்தார் பெக்கட் ஆண்டகை.

அத்தருணம்... முகமூடியணிந்து உருவிய வாட்கள் கரத்தில் பளிச்சிடக் கோமக்கள் நால்வர் பீடத்தை நோக்கி முன்னேறினர். திருச்சிலுவையுடன் முன்சென்று தடுக்க முற்பட்ட ஆண்டகையின் ஊழியர்கள் இருவரும் படுகொலைக்குள்ளாயினர். பேராயர் தோமஸ் பெக்கட் அஞ்சவில்லை. கம்பீரமாக அவர்களை நோக்கினுர்.

நிராயுதபாணியான தமக்கு அடுத்து நிகழ்வது என்னவென அவருக்குத் தெரியும். உள்ளறைக்குள் ஓடுமாறு துறவிகள் சைகை காட்டியதையும் அவர் அறிவார். ஆயின், கோழைத்தனமிக்க அச்செயலை அவர் சிந்திக்கவுமில்லை.

இடது கையிலே செங்கோல். வலது கையோ அவர்களை நோக்கி நீண்டு உறுத்தியவண்ணம் நின்றது. இது ஆண்டவனின் இல்லம். ஆயுதபாணிகளாக இப்புனித தலத்தினுள் பிரவேசிக்க நுமக்கு உரிமையில்லை. உடனடியாக வெளியேறுங்கள் என்று கர்ச்சித்தார்.

(— சாமுவேல் பெனடிக்ற் —)

பிரபுக்கள் பின்வாங்கவில்லை. முன்னேறினர். ஒருவனது வாள் செங்கோலை இருதுண்டாக்கியது. அஞ்சாநெஞ்சராக அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தபடியே நின்றுர் பெக்கட். கோமக்களின் ஆயுதங்கள் ஈவிரக்கமின்றி ஆயரின் திருமேனியைப் பலதடவைகள் பதம்பார்த்தனர், செங்குருதி வெள்ளமாயோட அறிவுமயங்கி, தள்ளாடி விழுந்த ஆயனின் நிலைகண்டு கூக்குரலிட்டுக் கதறினர் துறவிகள். கொலைஞர்களோ புரவிகளிலேறிக் காற்றினும் கடிதுசென்று மறைந்தனர்.

கன்ரர்பரி பேராயர் தோமஸ் பெக்கட்டின் படுகொலைச் செய்தி அகில உலகத்தையும் அதிர்ச்சியிலாழ்த்தியது. செய்தி கேட்டு விரைந்து வந்தான் இரண்டாவது என்றி மன்னன். நத்தால் பண்டிகையை பிரான்ஸ் தேசத்தில் களித்துக்கொண்டிருந்த அரசனை இச்செய்தி உணர்ச்சிவசப்படுத்திவிட்டது.

மக்கள் வெள்ளம் கன்ரர்பரி பேராலயத்தின் உள்ளும், புறமும் தேங்கிவழிந்தது. ஆயரின் படுகொலை கேட்டு விம்மிவிம்மி அழுதனர் பலர். பிரேத ஊர்வலத்தின்போது துயரம் தாங்காமல் கதறியழுதான் மன்னன் என்றி. பெக்கட்டைக் கொலை செய்தவர்களைத் தேடிப்பிடிக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது.

மன்னன் தங்கள் செயலால் அகமகிழ்வான் என்றெண்ணிப் படுகொலைக்குத் திட்டமிட்ட பிரபுக்கள் நிலைமை விபரீதமாகியது கண்டஞ்சித் தலைமறைவாயினர். பேராயரின் சடலம் சகல ஆடம்பர வைபவங்களுடனும் கன்ரர்பரி பேராலயத்தின் உள்ளறைகள் ஒன்றில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஆங்கு தோமஸ்பெக்கட் ஆண்டகையின் திருவுருவமும் ஊழியர்கள் இருவரது உருவங்களும் படுக்கையிலிருப்பது போன்ற சலவைக்கற்களால் பொறிக்கப்பட்டன.

பக்தர்கள் திரளாக இவ்விடத்துக்குத் தினசரி வருகை தந்தனர். அற்புதங்கள் பல நிகழ்ந்தன. 1173-ல் பாப்பரசர் மறைந்த பேராயரைப் புனிதவான்கள் வரிசையில் சேர்த்து அர்ச்சியசிஷ்டராகப் பிரகடனம் செய்தார். அம்மகிழ்ச்சித்தினத்தைக் கொண்டாடக் கன்ரர்பரி தேவாலயத்தில் பெருந்திரளான மக்கள் கூடினர். தனது பெயரால் இழைக்கப்பட்ட படுகொலைக்குப் பிராயச்சித்தம் செய்ய எண்ணிய அரசன் என்றி அத்தருணத்தில் பேராயரின் கல்லறைக்கு முன்பாகச் சென்று தனது மேலாடைகளைக் களைந்தபின் பலசாலிகளான நான்கு துறவிகளையழைத்து, தான் மெய் சோர்ந்து விழும்வரை கசையடிதருமாறு பணித்தான்.

இக்கொடூர தண்டனையால் தன் பெயரால் இழைக்கப்பட்ட பயங்கரச்செயலுக்குப் பரிகாரம் செய்தான் அரசன் என்றி. இவ்வித நற்குணங்கொண்ட மன்னனுக்கும், பேராயருக்கும் இடையில் நேர்ந்த பிரச்சனைகள் யாவை?

கன்ரர்பரீத் தலைமைப் பீடத்துக்கும், அரசபீடத்துக்குமிடையே பலகாலமாக அதிகார, உரிமைப்பிரச்சனைகள் பல தோன்றின, சாதாரண பிரபுக்களினதும், நீதிபரிபாலனத்தினதும் அதிகாரங்கள் திருச்சபை அதிகாரிகளைக் கட்டுப்படுத்துதல் சரியல்ல என திருச்சபையினர் பாராட்டி வந்தனர், சிறப்பாகத் திருமணம், விவாகரத்து முதலிய அம்சங்களில் திருச்சபையின் சட்டங்கள் அரசினுல் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டுமென அவர்கள் வாதாடினர்.

இவ்விதபிரச்சனைகள் காலத்துக்குக்காலம் மேலோங்குவதைத் தடுக்க எண்ணங்கொண்ட மன்னன் கன்ரர்பரி பேராயர் பதவி காலியானபோது தனது சொந்தச் செல்வாக்கினுல் தோமஸ் பெக்கட்டை அப்பதவிக்கு நியமித்தான். திருச்சபைச் சட்டங்களில் தேறி தியாக்கோன் அந்தஸ்துவரை உயர்ந்தபின் அரசனின் ஆலோசகனுகவும், அமைச்சனுகவும், உற்ற நண்பனுகவும் திகழ்ந்த பெக்கட் அதிமேற்றிராணியார் பதவியில் இருப்பதால் தனது பக்கமே திருச்சபை சாயும் என என்றியரசன் திட்டத்தில் மாபெருந் தவறு ஒன்றிருந்தது.

திருச்சபையின் மிக உன்னத பதவியொன்றிற்கு உயர்த்தப்பட்ட பெக்கட் அப்பதவிக்கே தன்னைப் பூரணமாக அர்ப்பணித்தார். இதன் பயனாக அவர் கண்ட கஷ்டங்கள் பல. அவைகளை அவர் துச்சமாக மதித்தார். ஒரு சமயத்தில் பதவியிலிருந்து விலகிச் செல்லவும் அவர் தயாராகவிருந்தார். தன்னுல் மேற்றிராணித்துவ பதவியின் புனிதம், நேர்மை, கண்ணியம், உரிமைகள் பழுதடையக் கூடாதென்பதில் அவர் உறுதியாயிருந்தார்.

எதிர்பார்த்தமைக்கு மாருக நிகழ்ச்சிகள் நடந்துகொண்டே செல்லினும் அரசனின் உள்ளம் பெக்கட்டின் மீது வைத்திருந்த பாசத்தில் சற்றேனும் குறையவில்லை. தோமசுக்கும், தனக்குமிடையிலான பிரச்சனைகளைச் சமரசமாகத் தீர்த்துக் கொள்ளவென தனிமையான இடமொன்றில் அவரைச் சந்திக்கவும் செய்தான். ஆயினும் பிரச்சனைகள் தீரவில்லை.

புனிதரான தோமஸ் பெக்கட்டின் பக்தி வெகு விரைவாக உலகமெங்கும் பரவியது. இரண்டாவது என்றி அரசனே முன்னின்று அவரின் திருநாட்களை ஆடம்பரமாகக் கொண்டாடினுன். என்றியின் புதல்விகள் பிறதேச மன்னர்களைத் திருமணம் செய்துகொண்டு கணவர்களின் ஊர்களுக்குச் சென்றபோது அங்கெல்லாம் இப்புனிதரின் நாமத்தால் ஆலயங்கள் எழுப்பி அவர் பெயரை மேலும் பரப்பினர்.

தோமஸ் பெக்கட் வேதசாட்சியாக மரித்த 800-ம் ஆண்டு வைபவங்கள் இங்கிலாந்தில் இவ்வாண்டு கொண்டாடப்படவிருக்கின்றன. ஆடிமாதம் 15-ம் திகதி இக்கொண்டாட்டங்களை மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணியின் தாயார் கன்ரர்பரி பேராலயத்தில் ஆரம்பித்து வைப்பார். மார்கழி வரையும் நடைபெறும் இக்கொண்டாட்டங்களில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

### நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், பரி. தேவதாயார், புனித சூசையப்பர், புனித சில்வேஸ்திரி முனியோர், புனித அந்தோனியார், புனித யூதாததேயு, இவர்களின் மன்றுட்டாலும் நான்கேட்ட வேண்டுதல் அனுகூலமாயிற்று. இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக. நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்

ஏத்துக்கால்

● செனக்கினுள் கன்னிகா சபையை அடியிட்டவரான மூத்.தெரேஸ் குடேர்க்தாயார் சென்ற வைகாசிமாதம் 10-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை சம்பேதுருவானவர் மகாதேவாலயத்தில் அர்ச்சியசிட்ட பட்டம் அருளப்பட்டபோது அச்சபையைச்சேர்ந்த கன்னியாஸ்திரிமாரும், பிறருமாகப் பெருந்திரளானமக்கள் சமுகமாயிருந்தார்கள்.

## அசீசியின்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் பிரான்சிஸ்குவானவர் தன்னைப்பின்பற்றித் தரித்திரத்திலும், சாதாரண சீவியத்திலும் வாழ விரும்பிய உலக வாசிகளாகிய ஆண், பெண் இருபாலருக்குமாக ஓர் ஒழுங்குத் திட்டத்தைத் தயாரித்துக்கொடுத்தார். இதனுல் உலகமூன்றும்சபை ஆக்கப்படலாயிற்று. இச்சபையார் சந்தோஷமாகத் தவத்திலும், தரித்திரத்திலும்காட்போக்கி வருகின்றனர்; பொதுசன சேவையில் மிகுந்த செல்வாக்கடைந்து, அக்காலத்து ஐரோப்பிய நிலமானிய ஏற்பாடுகளால் நடக்கும் தவறுகளுக்கும் பரிகாரம்செய்து வந்ததோடு, இன்றும் அவ்வாறு செய்துவருகின்றனர். (இச்சபை தற்போது நம்மிலங்கையில் கொட்டாஞ்சேனை, யாழ்நகர் ஆதியாம இடங்களில் உண்டு.)

புனித பிரான்சிஸ்குவானவர் தம்மரணத்துக்கு இரு வருடங்களுக்கு முன்னர், தனிமையான "லவேர்னு" என்னும் மலையடிவாரத்தில் செபித்துக்கொண்டிருக்கையில் முதலில் தேவதூதன் வடிவத்தில் காணப்பட்ட நமதாண்டவர், தமது ஐந்து திருக்காயங்களையும் அவர் சரீரத்தில் புதுமையாகப் பதியச்செய்தார், இவ்விதமாய் இப்புனிதர் நமதாண்டவரின் அன்பின் அடையாளமாகிய இவ்வைந்து திருக்காயங்களைப் பெறும் பாக்கியம் பெற்றுர். இவருடைய ஏக ஆவலும், எல்லாவற்றிலும் தம் தலைவராகிய நம் ஆண்டவரைப் போலாவதே.

இவர் இக்காயங்களால் மிகவும் துன்பப்பட்டாலும், தம் மனச் சந்தோஷத்தை ஒரு போதும் இழக்கவில்லை. இதன் உண்மை, அவர் இத்தாலிய பாஷையில் எழுதிய சிறந்த முதல் கீதமாகிய 'சூரிய கீதத்தினுல்' (Song of Sun) நன்கு விளங்கும்.

1226-ம்ஆண்டு ஐப்பசி 3-ம் நாள் சூரிய அஸ்தமனத்தின் போது, கிறீஸ்துவின் புகழ்பெற்ற பாவலராகிய நம் புனிதர் இக்கீதத்தைப் பாடிக்கொண்டு, நன்றிகெட்ட நமக்காகத் தம்முயிரைப் பலியாக்கியாக்கிய கிறீஸ்துவுக்காகத் தம்முயிரையும் பலியாகக் கொடுத்தார். ஆ! அன்பின் அதிமேலான பலி!! இவர் இறக்கும்போது இவருக்கு வயது 44. இறந்த இருவருடங்களின் பின்னர் "அசீசியின் சிறிய ஏழைமனிதன்" என உலகம் போற்றும் இவர் 9-ம் கிறகோரி பாப்பானவரால் புனிதபட்டம் சூட்டப்பட்டார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி
### ஆனி — 1970

| | | | |
|---|---|---|---|
| 7 | ஞாயிறு | வருட 10-ம் ஞாயிறு | [ப] |
| 8 | திங்கள் | தினப் பூசை | [ப] |
| 9 | செவ்வாய் | ,, | [ப] |
| 10 | புதன் | ,, | [ப] |
| 11 | வியாழன் | புனித பர்ணபாஸ் | [சி] |
| 12 | வெள்ளி | தினப் பூசை | [ப] |
| 13 | சனி | புனித அந்தோனியார் | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# சமய இலக்கியப் பணி

இன்றையஉலகில் பற்பல தொடர்பு சாதனங்கள் மக்கள்கருத்தைப் பரப்புவதற்குப் பயன்பட்டு வருகின்றன. ஆயினும், அவற்றுள் முக்கிய இடம்வகிப்பது அச்சுப் பிரசுரமேயாகும். உலகச்சார்புள்ள பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், நூல்களும் நிமிடத்துக்கு நிமிடம் வெளிவந்து தமது கருத்துக்களைப் பரப்பிய வண்ணமா யிருக்கின்றன. இவற்றால் உலகியலறிவு பெருகி வருவது கண்கூடு. தீய சக்திகளும் தமது தவறான கொள்கைகளையும், ஆபாசஒழுக்கங்களையும் பரப்புவதற்கு இதே வழியைக் கையாளுகின்றன.

இவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இங்குகாணப்படும் கத்தோலிக்க நூல்களும், பத்திரிகைகளும் விசேஷமாகத் தமிழில் உள்ளவை மிகச்சிலவேயாம். அவற்றையும் ஒழுங்காக வாசிப்பவர் அநேகர் என்று சொல்லமுடியாது. கத்தோலிக்க சமூகத்தினரில் மிகக் குறைந்த விகிதத்தினரே கத்தோலிக்க பிரசுரங்களை ஒழுங்காக வாசிக்கின்றனர் என்பதை இப்பிரசுரங்களின் விற்பனைத் தொகையிலிருந்தே அறிந்துகொள்ளலாம். ஆயினும், ஆன்மீக அறிவைப் பெருக்குவது இன்றியமையாத தொன்றாகும். அப்படி இருந்தும் அதை அலட்சியஞ் செய்துவரும் கிறிஸ்தவரைத் தட்டி எழுப்பி நன்நூல்களை வாசிக்கும் பழக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தும் நோக்கமாகவே நல்வாசினைவாரம் கொண்டாடப் படுகிறது. விலைப்படாமற் கிடக்கும் கத்தோலிக்க பிரசுரங்கள் சிலவற்றை விலைப்படுத்துவதற்காக அன்று. ஆகவே, இவ்வாரம் பெயருக்குச் சில கத்தோலிக்க நூல்களை வாங்கிவிட்டு அவற்றை வாசிக்காமற் போட்டுவிட்டால் நல்வாசினை வாரத்தின் நோக்கம் நிறைவேறியதாகாது.

ஆனால் வாசினைக்குப் போதிய பிரசுரங்களின்றி பிரசாரம் செய்வது அதிகபலனை அளிக்காது. மக்கள் தெரிந்து வாசிக்க ஏராளமான பலதிறப்பட்ட பிரசுரங்கள் இருக்கவேண்டும். அவை மக்களுக்குக் கிட்டும்படி செய்யவும் வேண்டும்.

இப்பணியில் முன்வந்து பணியாற்ற வேண்டியவர்கள் கத்தோலிக்க எழுத்தாளர்களே. புதுப்புது நூல்களைக் கவர்ச்சியான முறையில் உருவாக்கினால் மக்கள் சமயஇலக்கியங்களைக் கண்டு அஞ்சி ஒதுங்க மாட்டார்கள். மதபோதக நூல்களை மட்டுமல்லாமல், கத்தோலிக்க பின்னணியில் அமைந்த சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் ஆகியவற்றையும் இயற்றினால் பிறமதத்தினருங்கூட அவற்றை வாசித்து இன்புறவும், பயனடையவும் கூடும். இன்றைய திருச்சபையில் எழுத்தாளருக்குப் பரந்த சுதந்திரமிருப்பதால் எல்லோரும் ஒரே குறுகிய முறையைக் கையாள வேண்டிய அவசியமும் இல்லை. கத்தோலிக்க பிரசுரங்களுக்கிருக்கும் மற்றொரு இடையூறு நிதிக்குறைபாடாகும். கத்தோலிக்க பிரசுரங்கள் பெருந்தொகையாக விற்பனையாகாத காரணத்தால் அவற்றைப் பிரசுரிப்பது பெரும் நஷ்டமாகவே முடியும். இதன் காரணமாகத்தான் மக்கள் ஆன்மீக நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாலொழிய, கத்தோலிக்க பிரசுரங்கள் வெற்றிகரமாக வெளிவருவது துர்லபம்.

ஆனால் மக்கள் இன்று வெளிவந்துள்ள பிரசுரங்கள் எவையென்பதையும், அவை கிடைக்கக்கூடிய இடங்களையும் அறிவார்களா? அவற்றைப்பற்றிப் போதியளவு விளம்பரம் செய்யப்படுகிறதா? ஒவ்வொரு ஊரிலும் யாராவது முன்வந்து ஒரு கத்தோலிக்க இலக்கிய விற்பனை நிலையத்தை நடத்தினால் எவ்வளவு நலமாயிருக்கும்.

மற்றொரு விரும்பத்தக்க அம்சம் நூல்நிலையங்களாகும். இவற்றின் மூலம், நூல்களை வாங்குவதற்கு பொருள்வசதி யற்றவர்களும் அவற்றை வாசித்துப் பயனடையக் கூடியதாயிருக்கிறது. விசாரணைப் பங்குகள், பாடசாலைகள் முதலிய இடங்களில் கத்தோலிக்க நூல்நிலையங்கள் நடாத்தப்பட்டால் அவற்றால் பெரும் பயன் ஏற்படும் என்பது சொல்லாமலே விளங்கும்.

இன்று கத்தோலிக்கருடைய கடமை நல்வாசினை ஞாயிறன்று சிலபுத்தகங்களை வாங்குவதோடு முடிந்துவிடாது, தொடர்ந்து ஆன்மஞான நூல்களைப் படித்து வருவதும், அவற்றின் பிரசுரத்தில், விநியோகத்தில் தம்மாலான உழைப்பை நல்குவதும் அவர்தம் கடமையாகும்.

# திருப்பண்டங்களின் சிற்றாலயம்

பிரான்ஸ்தேச அரசரான 9ஆம் லூயிஸ் மன்னர் கொன்ஸ்தாந்திநோப்பிள் சக்கரவர்த்தியின் யுத்த கடன்களை தீர்த்தபோது, அதற்குப்பதில் திருப்பாடுகளின் எத்தனங்களிலே முக்கியமான சில திருப்பண்டங்களை—அதாவது முண்முடி, ஓர் ஆணி, உண்மையான திருச்சிலுவையின் ஒரு துண்டு — என்பவைகளைப் பெற்றுக் கொண்டார்.

இவைகளைப் பெற்றுக் கொண்டு அரசர் பரீஸ்நகருக்குத் திரும்பியதும் அவைகளைப் பூச்சியமாக வைத்துப் பாதுகாப்பதற்கென "செயின்ரே சப்பெலெ" எனும் சிற்றாலயம் ஒன்றைக் கட்டினார். இது சீன்நதியின் மத்தியிலுள்ள ஒருதீவில், நோட்றேடாமுக்கு அதிகம் சமீபமாகக் கட்டப்பட்டது. இதில்தான் ஒரு காலத்தில் பிரான்சிய மன்னர்களின் மாளிகை இருந்துவந்தது.

இன்று இச்சிற்றாலயம் பிரான்சிய நீதிப்பரிபாலன மாளிகையால் சூழப்பட்டுள்ளது. இது சமீபத்திலே சுத்தஞ்செய்யப்பெற்று, இப்பொழுது அதன் கற்கள் புனித லூயிஸ்மன்னர் அதைக்கட்டியபோது இருந்ததுபோல் வெண்மையாகப் பளீரிட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் உட்புறத்திலே அடித்தளத்திலிருந்து வில் வளைவுவரையில் சூழவரப் பதிக்கப்பட்டுள்ள சித்திர வேலைப்பாடமைந்த கண்ணாடிகளிலே பைபிளிலிருந்தோ அன்றேல் திருப்பண்டங்கள் பற்றிய சரித்திரவரலாற்றிலிருந்தோ எடுக்கப்பட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட சித்திரக்காட்சிகள் பார்ப்பவர்களுக்கெல்லாம் பரவசமூட்டுவனவாகும். பலிபீடச் சிங்காசனத்தின் பின்புறமாகத் தூரமான அந்தத்திலுள்ள அலங்கார மேடையில் இத்திருப்பண்டங்களைக் காட்சிக்கு வைப்பது அன்று முதல் வழக்கமாயிருந்து வரலாயிற்று.

துரதிர்ஷ்டவசமாய் இத்திருப்பண்டங்கள் இப்போது அங்கில்லை. பிரான்சிய அரசியற்புரட்சிக் காலத்திலே அங்கிருந்து இவைகள் அகற்றப்பட்டுத் தற்போது நோட்ரேடாம் தேவாலயத்தில் இருந்து வருகின்றன. இவைகளுக்கென புனித லூயிஸ் அரசர் கட்டிய அழகியசிற்றாலயம் இன்று ஒரு வெறுமையான ஸ்தூபமாய் —ஆனால், ஒருசிறந்த ஞாபக சின்னமாய்த் திகழ்கின்றது.

# பிரான்சு தேசத்தில் சிலவிசேஷ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தேச தேசிய மேற்றிராணி மார்சங்கம் முடிவு செய்திருக்கிறது. அம் முடிவுகளிற் சில பின்வருமாறு:

- குருமாரில்லாத இடங்களில் ஒரு குருவானவர் ஒரு பெருந்தொகை விசுவாசிகளுக்குத் தேவநற்கருணை கொடுக்க இருக்குமானால் விசேஷமாகத் தெரிவு செய்யப்பட்ட இல்லறத்தோர் குருவானவருக்கு உதவிசெய்யலாம்.
- வியாதியாயிருப்பவர்களை அவர்கள் இல்லத்தில் அல்லது வைத்தியசாலையில் குருவானவர் தரிசிப்பது கஷ்டமான கருமமாயிருப்பின் வியாதிஸ்தரின் குடும்பத்தில் உள்ளவரில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவர் சற்பிரசாதம் கொண்டுசென்று கொடுக்கலாம்.
- குருமார் தரிசிக்க முடியாது இருக்கும் தூரப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட இல்லறத்தவர் சில குறித்த செபங்கள் செபித்தன்பின் அங்கு சற்பிரசாதம் பெற விரும்புவர்களுக்கு திவ்விய நற்கருணையைக் கொடுக்கலாம்.


வெளியாகிவிட்டது

சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவரின்
இன்னுமொரு புத்தகம்

## பதுவை அந்தோனியார்

தரமான பதிப்பு — விலை ரூபா 2-25

வியாபாரிகள் தொடர்பு கொள்ளுங்கள்:

யோ, ஜூலியஸ் இராசையா,
6, சென்மேரிஸ் லேன்,
ஊர்காவற்றுறை.



## விளம்பரம்

### யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய கல்வி நிலையம்

கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண) பரீட்சைக்குப் (G. C. E. Ordinary) பிரத்தியேகமாக ஆயத்தம்செய்யும் மாணவர்களுக்கு உதவியாக ஒருபுதிய கல்விநிறுவனம் அண்மையில் யாழ்ப்பாணம், பிரதானவீதியில் ஸ்தாபிக்கப்பட இருக்கிறது. ஆரம்பத்தில் கல்விகற்பிக்கப்படும் பாடங்கள் பின்வருவன.

1: தமிழ் பாஷை
2. தமிழ் இலக்கியம்
3: ஆங்கில பாஷை
4. ஆங்கில இலக்கியம்
5: தூய கணிதம்
6. எண் கணிதம்
7. உயர் கணிதம்
8; பௌதீகவியல்
9: இரசாயனம்
10; உயிரியல்
11; சரித்திரம்
12; குடியியல்
13; புவியியல்
14; பொருளாதாரம்

இந்நிறுவனத்தில் சேரவிரும்பும் மாணவர்கள் எப்பாடங்களில் கல்விஉதவி தேவையென்று குறிப்பிட்டு, பின்வரும் முகவரிக்கு ஆனி 11-ந்திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும். மற்றும் விபரங்களை இதே முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்;

**DIRECTOR,**
Youth Study Centre
Post Box 2, Jaffna.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆடு ஆனிமீ 6ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org